முடிந்துள்ளன என்ற விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். கண்டிப்பாக கூடியவிரைவில் அனைத்துப் பணிகளும் முடிவுறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள், (குறுக்கீடு) திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. அர. சக்கரபாணி. உட்காருங்கள், இதை நான் allow செய்ய மாட்டேன். (குறுக்கீடு) இதை நான் allow செய்யவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) Zero Hour–ல் அவரை நான் allow செய்தேன். அவர், கேட்டிருக்கிறார், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) இல்லை, இல்லை, மேற்கொண்டு நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள், சபையை நடத்துவதற்கு எனக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள். இல்லை, திரு. பெரியசாமி, கேட்பதற்கு நான் அனுமதித்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான பதிலைச் சொல்லிவிட்டார். அப்போது, திரும்பவும், நான் பேசுவேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? நீங்கள் என்ன சொன்னாலும், அனுமதியில்லை, அனுமதி தரமுடியாது, உட்காருங்கள்.*

(இ) சுசீந்திரம், தாணுமாலய சுவாமி கோயில் தெப்பக்குளம் தூர்வாரி சீரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுசீந்திரம், தாணுமாலய சுவாமி திருக்கோயிலில் உள்ள தெப்பக்குளம், அதில் உள்ள அடி மடைகள் எல்லாம் பழுதாகி, அசுத்தமான தண்ணீரை வெளியேற்ற முடியாத நிலையிலே, மீன்கள் எல்லாம் செத்து மடிந்தும், பாசி பிடித்தும், துர்நாற்றம் வீசக்கூடிய அளவிலே இருக்கின்றது என்று சொல்லி, அதைச் சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, கவன ஈர்ப்பு அறிவிப்பு ஒன்று கொடுத்திருந்தேன். அதன் அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலிருந்து உரிய உத்தரவு*

2019 ஜூலை 16] [திரு. எஸ். ஆஸ்டின்]

வழங்கப்பட்டு, 3 நாட்கள் மட்டும் டீசல் மோட்டார் பொருத்தி, அந்த அசுத்தமான தண்ணீரை வெளியேற்றினார்கள். அப்படி வெளியேற்றப்பட்ட தண்ணீர்கூட சாலையில் உள்ள கால்வாய் வழியாக வெளியேற்றப்பட்டிருக்கிறது. இதனால் எந்தப் பயனும் அந்த மக்களுக்கு ஏற்படவில்லை. அந்தக் கோயில் தெப்பக் குளத்தில் உள்ள தண்ணீர் மூலமாகத்தான் அங்கே இருக்கக்கூடிய கோயில் பூஜைக்குத் தேவையான தண்ணீர் எடுக்கிறார்கள். அதேபோல பக்தர்களும் அதைத்தான் பயன்படுத்துகின்றார்கள். எனவே, குளத்தில் உள்ள அடி மடையைச் சீரமைத்து, அந்த shutter-ஐ எல்லாம் பழுதுபார்த்து, அடிமடையிலிருந்து தண்ணீரை வெளியேற்றுவதற்கு தனியாகக் கால்வாய் இருக்கிறது. அந்தக் கால்வாய்கள் எல்லாம் இன்றைக்கு அடைந்துபோய் தூர் வாரப்படாமல் இருக்கின்றது. அதைச் சீரமைத்தால் மட்டும்தான் நிரந்தரமாக ஒரு தீர்வு ஏற்பட்டு, குளத்தில் காலம் காலமாக சேர்ந்துள்ள அசுத்தமான தண்ணீரை வெளியேற்ற முடியும். அந்த அடிப்படையில், நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும் தூர்வாரி, மழைக் காலங்களில் தண்ணீர் நிரப்புவதற்கு ஆணையிட்டு, இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்காக ரூபாய் 500 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களிலுள்ள திருக்குளங்கள் அனைத்தையும் தூர்வாரிச் செப்பனிட ஆணையிட்டார்கள். அந்த வகையிலே, சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக் குளத்திற்கு பழையாற்றின் சோழன்திட்டை அணை மதகு வழியே திருக்கோயில் உள் வரத்துக் கால்வாய் வழியாகத் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. மேற்படி திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டின்போதும் மற்றும் 2011 ஆம் ஆண்டும் தெப்பக்குளத்தின் அசுத்த நீர் வெளியேற்றப்பட்டு, சகதிகள் தூர் வாரப்பட்டு, புதியதாக தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. மேலும், 2011 ஆம் ஆண்டு தெப்ப மண்டபம் (மைய மண்டபம்) அடித்தளம் சீரமைக்கப்பட்டு, அலங்கார

[திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்] [2019 ஜூலை 16

கைப்பிடிச் சுவர்கள் அமைத்தல், படிக்கட்டுகள் பாதுகாப்பாக அமைத்தல் போன்ற பணிகளும் செய்யப்பட்டு, திருக்கோயிலில் தெப்பக்குளப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், குளத்தில் உள்ள பாசிகள், திருக்குளப் படிக்கட்டில் உள்ள பாசிகள் எல்லாம் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு, அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது தென்மேற்குப் பருவ மழை தொடங்குகின்ற நிலையில் இத்திருக்குளத்தைத் தூர் வார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அசுத்த நீர் ஏதும் கலக்காமல் இருப்பதற்கு புதியதாக இரும்பு shutter பொருத்த, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு ஆணையிட்டதன் அடிப்படையில், மேலும், தண்ணீர்மேலே படிகின்ற பாசிகளை மின் மோட்டார்மூலம் வெளியேற்றவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு, விசைத் தறி மற்றும் பெடல் தறி நெசவாளர்களுக்கு கூலி உயர்வு, தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான வட்டி மானியத்தை உயர்த்துதல் தொடர்பான கைத்தறி மற்றும் துணிநூல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், நெசவாளர்கள் தற்போது பெற்றுவரும் அகவிலைப்